KALANJIYAM – International Journal of Tamil Studies
An international, peer-reviewed academic journal
e-ISSN: 2456-5148
Vol. 6, No. 03 (2026) 6

களஞ்சியம்
Peer-reviewed · Open access · Google Scholar
Crossref DOI · SJIF Imapact Factor 3.5 · Quarterly
Online@: ngmtamil.in
DOI: 10.63300/kijts603112026.18

ARTICLES

'முறி' புதினம் காட்டும் மலையாளி இன மக்களின் வாழ்வியலைப் பிரதிபலிக்கும் பழமொழிகள்

Proverbs Reflecting the Lifestyle of the Malayali People as Shown in the Novel 'Muri'

M. Kasthuri[1,*], Dr. M. Rajasekaran[2]

[1] PhD Research Scholar (Full-time) (BDU), Department of Tamil, Bishop Heber College (Autonomous), (Affiliated to Bharathidasan University), Tiruchirappalli 620017.

[2] Associate Professor & Research Supervisor, Department of Tamil, Bishop Heber College (Autonomous), (Affiliated to Bharathidasan University), Tiruchirappalli 620017

***Corresponding author:** M. Kasthuri, kasthurimurug18@gmail.com

ORCID iD: Dr. M. Rajasekaran https://orcid.org/0009-0006-7870-9177

ARTICLE INFO

Article history
Received: 10 October 2026
Revised: 12 October 2026
Accepted: 28 October 2026

Article ID
KIJTS-2026-0009

Peer review
Double-blind peer review

Keywords
Muri
Malayali
tribal
vernacular
Tongaluthu
hill people

ABSTRACT

The study of proverbs reflecting the life of the Malayali people shown in the novel 'Muri' examines the life of the Malayali people through the novel through proverbs, one of the folk elements. It looks at the contribution of oral elements in understanding the traditions, cultures and lifestyle of a tribal society. This study focuses on the proverbs featured in the novel. Proverbs and their use are discussed in literature. The centre and the plot of the novel Muri are important. The proverbs featured in the novel are compiled under the headings of family, philosophy, nature, animals and birds, customs and beliefs, psychology, deity, agriculture, trees and plants, months, planets, fine arts, astronomy, medicine and polytheism.

How to cite this article: M. Kasthuri, & Dr. M. Rajasekaran (2026). 'முறி' புதினம் காட்டும் மலையாளி இன மக்களின் வாழ்வியலைப் பிரதிபலிக்கும் பழமொழிகள். *KALANJIYAM – International Journal of Tamil Studies*, *6*(03), 265–275. https://doi.org/10.63300/kijts603112026.18
Copyright and licence: © 2026 The Author(s). This is an open access article distributed under the terms of the Creative Commons Attribution 4.0 International License (CC BY 4.0), which permits unrestricted use, distribution and reproduction in any medium, provided the original work is properly cited.

'முறி' புதினம் காட்டும் மலையாளி இன மக்களின் வாழ்வியலைப் பிரதிபலிக்கும் பழமொழிகள்

மு. கஸ்தூரி

முனைவர் பட்ட ஆய்வாளர்(முழு நேரம்),(BDU2410632781139)

தமிழாய்வுத்துறை, பிஷப் ஹீபர் கல்லூரி, (தன்னாட்சி),

பாரதிதாசன் பல்கலைக்கழகத்துடன் இணைவு பெற்றது,

திருச்சிராப்பள்ளி-620017.

முனைவர்.மு.இராஜசேகரன்,

இணைப்பேராசிரியர் மற்றும் ஆய்வு நெறியாளர், தமிழாய்வுத்துறை,பிஷப் ஹீபர் கல்லூரி,(தன்னாட்சி), பாரதிதாசன் பல்கலைக்கழகத்துடன் இணைவு பெற்றது,

திருச்சிராப்பள்ளி-620017.

ஆய்வுச்சுருக்கம்

'முறி' புதினம் காட்டும் மலையாளி இன மக்களின் வாழ்வியலைப் பிரதிபலிக்கும் பழமொழிகள்என்ற ஆய்வு,நாட்டுப்புறக் கூறுகளில் ஒன்றான பழமொழியின் வாயிலாக மலையாளி இன மக்களின் வாழ்வியலை நாவலின் மூலம் ஆராய்கிறது.ஒரு பழங்குடிச் சமூகத்தின் மரபுகள்,பண்பாடுகள் மற்றும் வாழ்க்கைமுறையை புரிந்துகொள்வதில் வாய்மொழிக் கூறுகளின் பங்களிப்பினை நோக்குகிறது. இவ்வாய்வு நாவலில் இடம்பெற்றுள்ள பழமொழிகளை மையமாகக் கொண்டு அமைகின்றது.இலக்கியங்களில் பழமொழி, அதன் பயன்பாடு பேசப்படுகிறது.முறி நாவலின் மையமும்,கதைச்சுருக்கமும் முக்கியத்துவம் பெறுகிறது. நாவலில் இடம்பெறும் பழமொழிகள் குடும்பம்,தத்துவம்,இயற்கை,விலங்குகளும் பறவைகளும் ,பழக்கவழக்கங்களும் நம்பிக்கைகளும்,உளவியல் ,தெய்வம்,வேளாண்மை,மரம் செடி கொடிகள் ,மாதம் கிழமை,கோள்கள்,நுண்கலை,வானியல்,மருத்துவம் மற்றும் பல்பொருள் ஆகிய தலைப்புகளின் கீழ் தொகுக்கப்பட்டு கட்டுரை அமைகிறது.

முக்கியச் சொற்கள்-
முறி,மலையாளி,பழங்குடி,பழமொழி,தொங்கலூத்து,மலைவாழ் மக்கள்

முன்னுரை

மனித இனம் தோன்றிய காலத்தே நாட்டுப்புறப் பழமொழிகளும் வாய்மொழிக்கூறுகளாக தோன்றி விட்டன. அவை மனித மனத்தின் உள்ளத்துப் புலப்பாடுகளை வெளிப்படுத்துவதாகவும், காலத்தால் மறுக்க இயலாததாகவும் நிலைபெற்றுவிட்டன. ஒன்றோடொன்று தொடர்புடைய நாட்டுப்புறக்கூறுகளில் பழமொழிகளுக்கென்றே தனித்த சிறப்புண்டு. பழமொழிகளானது ஏனைய நாட்டார் வழக்காறுகளிலிருந்து மாறுபட்டு நிற்பவை. நாட்டார் வழக்காற்றுகளின் பிற கூறுகளான தாலாட்டுப் பாடல்கள், ஒப்பாரிப் பாடல்கள் போன்றவை பெண்களால் பாடப்படுபவை. மேலும் இவைகள் சூழலின் காரணமாக உருவாவதாகும். ஆனால் பழமொழியானது எத்தகுச் சூழலிலும் பால் பாகுபாடின்றி, இன வேறுபாடு இன்றி அனைத்துச் சமூகமும் பயன்படுத்தும் சிறப்பினை உடையது. அவை மலையாளி இன மக்களின் வாழ்வியற் பண்பாட்டை எவ்வாறு பிரதிபலிக்கின்றன என்பதை 'முறி' நாவலின் வாயிலாக விளக்க முற்படுவதே இவ்வாய்வுக் கட்டுரையின் நோக்கமாகும்.

பழமொழி

சமுதாயத்தினுடைய ஆழ்ந்த அறிவுத்திறனையும், முதிர்ச்சியான அனுபவத்தினையும் வெளிப்படுத்துவதற்கு சான்றாதாரமாவது விடுகதையும், பழமொழியுமாகும். நன்னூலார் குறிப்பிடும் சுருங்கச் சொல்லி விளங்க வைத்தல் தன்மையுடையன.

“பழமொழி என்பது உலகுக்கு உணர்த்தும் உண்மையை ஒரு சிறிய வாக்கியத்தின் மூலமாக சுருக்கி கூறுவது ஆகும்”1

பழமொழியும் தமிழ் இலக்கியங்களும்

தொல்காப்பியர் ‘முதுசொல்’,‘முதுமொழி’ போன்ற சொற்களால் பழமொழியைக் குறிப்பிடுகின்றார்.

“அங்கதம் முது சொல்லோடு அவ்வேழ் நிலத்தும்”2

‘ஏது நுதலிய முதுமொழி என்ப’3

தொல்காப்பியம், சிலப்பதிகாரம் மற்றும் கொன்றைவேந்தன் போன்ற நூல்களில் பழமையானது வெவ்வேறு பெயர்களில் குறிப்பிடப்பட்டுள்ளது.

தொல்காப்பிய உரையாசிரியரான நாச்சினார்க்கினியர் பழமொழியை ‘பழம் வார்த்தை’ என்கிறார். தொல்காப்பியக் காலம் தொட்டு இன்று வரையிலும் பழமொழியானது தொன்மை மாறாது வாய்மொழிக் கூறுகளிலும் இலக்கியங்களிலும் மிளிர்கின்றது.

பழமொழிப் பயன்பாடு

பழமொழிகளை உலகிலுள்ள அனைத்துச் சமுதாயங்களும் பயன்படுத்துகின்றன. முன்னேறிய சமுதாயமும் முன்னேற்றமில்லாச் பழங்குடிச் சமுதாயமும் பழமொழியைப் பயன்படுத்துகின்றன’.4

சமுதாயத்திற்கு நன்மைப் பயக்கும் செயல்களை ஆற்றலாம் என எடுத்துரைப்பதற்கும், அறக்கருத்துக்களை வலியுறுத்தி, உண்மையை நிலைநாட்டவும் தீமைப் பயக்கும் செயல்களில் ஈடுபடக்கூடாது என்பதனை இடித்துரைப்பதற்காகவும் பயன்படுகிறது.

முறி நாவலில் மலையாளி இன மக்கள்.

தமிழகத்தின் தருமபுரி மாவட்டம், சித்தேரி மலையில் அமைந்துள்ள அழகிய பழங்குடியின மலைக்கிராமமே தொங்கலூத்து. காராளக்கவுண்டர்கள் என்கின்ற மலைவாழ் பழங்குடியின மக்களின் கிராமம்.

தமிழகத்தின் பழங்குடியினர் நலத்துறையால் வெளியிடப்பட்டுள்ள (37) பழங்குடியினர் பட்டியலில் இவர்கள் **மலையாளிகள்** என்ற பிரிவில் இடம்பெறுவர். இத்தொங்கலூத்தில் வசிக்கும் மலையாளிப் பழங்குடியின மக்களின் வாழ்வியலை அடிப்படையாகக் கொண்டு உருவாக்கப்பட்டப் புதினமே ‘முறி’ என்பதாகும்.

தொங்கலுத்தில் உண்மையாகவே வாழ்ந்த வைத்தியப்பாட்டன், பீமன் ஆகியோரது அறிவார்ந்தப் பண்பாட்டு மாறாத மரபு இதில் பேசப்படுகிறது. **பச்சாயி** என்ற பெண்ணிற்கு **காராளன்** என்பவன் கணவன். அவன் குடியினால் இறந்து போகுதல். இவர்களுக்கு இரண்டு மகள்கள் இருந்தனர். அதன் பிறகு ஊர் கூடி **நாட்டுப் பெண்ணாக** பச்சாயியை அறிவித்து **அண்ணாமலை** என்பவருக்கு திருமணம் செய்து வைத்தனர். பச்சாயியின் இரண்டாவது மகளான **தனத்தை**, **கல்லாத்துபட்டியான்** என்ற ராமனுக்கு திருமணம் செய்து வைத்தல். தனம் அவனை வெறுத்தல். இப்புதினத்தில் தனத்தின் நடவடிக்கைகள் மாறுவதாகவும் முறி வைக்கும் தேவை ஏற்படுவதாகவும் அமைகின்றது. திருவிழா போன்ற விழாக்களின் போதும் முறி வைக்கின்றனர். தனம் **சூரியக்கடையான்** என்பவனை விரும்புதல் அவனுக்கு திருமணம் ஆகவில்லை. சூரியக் கடையான் என்பவன் மாடனின் மகன் ஆவான். **மாடன்** வைத்தியப் பாட்டனின் வளர்ப்பு மகன் இவர்களின் ஆழமான அன்பும் உறவும் நாவலில் பேசப்படுகின்றது. கல்லாத்துப்பட்டியானை முறி வைத்து பிரிந்த தனம் சூரியக்கடையானை திருமணம் செய்தல். மாடன் வைத்தியப்பாட்டன் மற்றும் பீமன் மட்டுமே மலையில் இருந்தனர் மற்றவர்கள் அனைவரும் மலையை விட்டு கீழே சென்று விட்டனர். தனத்திற்கு குழந்தை பிறந்தது, மலையை விட்டு பச்சாயியின் குடும்பமும் வெளியேறியது. **மாதம்மா** கருப்பி மகள். **கருப்பி** பச்சாயி-காராளனின் மூத்த மகள் . சூரியக்கடையான் சந்தன மரம் இருக்கும் இடத்தைக் காட்டுதல் சந்தன மரத்தை வெட்டுதல், விற்றல் போன்ற பிரச்சனைகள் நாவலில் பேசப்பட்டுள்ளன. தனம் அவளது இரண்டாவது பிரசவத்தின் போது இறந்து விடுகிறாள், அவள் இறப்பிற்குப் பிறகு அவளது கணவன் சூரியக்கடையான் மனம் மாறி போலீஸிடம் சரணடைதல். வைத்தியப் பாட்டனின் இறப்பு, மாடனின் இறப்பு போன்றவைகள் நாவலில் இடம்பெற்றுள்ளன.

முறி

கட்டுப்பாடு என்பது வாழ்விற்கு அவசியம். கட்டுப்பாடற்ற வேகமும் வாழ்வும் நிச்சயம் வீழும். காவல்நிலையம் இல்லாத மலைக் கிராமங்கள் இன்றளவும் உள்ளன. அவர்களுக்கென்று நெறிமைப்படுத்தப்பட்டச் சட்டங்களை வரையறைப்படுத்தி கட்டமைத்திருக்கின்றனர். அவர்கள் செம்மாந்த வாழ்வினை வாழ இவை உதவுகின்றன. இதனைக் கட்டிக் காப்பாற்ற வயதிலும் அனுபவத்திலும் மூத்தோர்கள் வேண்டிநிற்க அவற்றை மீறுவோராக இன்றைய தலைமுறையில் சிலர் இருகின்றனர். மரபுவழிப்பட்டோர்- மரபு மீறுவோர் எனும் வேறுபட்டோர்களாக உள்ளனர் என்கிறார் நாவலாசிரியர்.

‘எவர்க்கும் எதற்கும் கட்டுப்படாத போக்குடைய இயல்பு கொண்டவர்களையும் கூட தேவசபையில் வைக்கப்பெறும் முறி வைத்தல் எனும் வழக்கம் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்து நிறுத்தி அவர்களைக் கட்டுப்படுத்தி நெறிப்படுத்தி இருக்கிறது’.5

முறி வழக்கத்தின் நீட்சியாகத்தான் தற்போது நீதிமன்றங்களில் பகவத்கீதையின் மீது முறி (கட்டுப்படுதல்\சத்தியம்) வழக்கம் உண்டாயிருக்க வேண்டும் என்கிறார் நூலாசிரியர்.

முறி நாவலும் பழமொழியும்

இப்புதினமானது மலையாளி இன மக்களின் நாட்டுப்புறக் கூறுகளை பிரதிபலிக்கும் நடையில் அமைந்துள்ளது. தாலாட்டுப் பாடல்கள், ஒப்பாரிப்பாடல்கள், பாடம்போடும் வைத்தியக் குறிப்புகள்,வட்டார வழக்குச் சொற்கள், பழமொழிகள் மற்றும் பெயர்க்காரணம் போன்றவற்றை மையமாகக் கொண்டுள்ளன. எனினும் நூற்றுக்கும் மேற்பட்ட பழமொழிகளின் வாயிலாக கதாப்பத்திரங்களை வழிநடத்துவதாக அமையப்பெற்றுள்ளது. பழமொழிகளின் மூலமாகவே நாவல் நகரும் போக்கினையும்,சூழலுக்குத் தகுந்தாற் போல அமையப்பெற்றுள்ளது. பழமொழியானது இப்பழங்குடி மக்களது வாழ்வில் இன்றியமையாததாக உள்ளது.

குடும்பம்

1.மூத்தவ மோள இளையவ காள

2.பட்ட காலிலே படும் கெட்ட குடியே கெடும்

3.அப்பன் சோத்துக்கே அழறான் புள்ளைக்கு பட்டு வேட்டி கேக்குது

4.ஆகாத புருஷன் கைப்பட்டாலும் குத்தம் கால் பட்டாலும் குத்தம்

5.குடும்பமுன்னா குத்தங்கொற இருக்கதா செய்யும்

தத்துவம்

1.ஆண்டாண்டு காலம் அழுது புரண்டாலும் மாண்டவர் மீண்டும் வரப்போவதில்ல

2.ஆண்டியும் ஆண்டியும் கட்டிக்கிட்டா சாம்பலும் சாம்பலும் ஒட்டிக்க தான செய்யும்

3.உடைஞ்ச கண்ணாடி விஷ கண்ணாடி தொடரவிய கைய அறுக்கத்தான் செய்யும்

4.நம்ம ஊட்டு விளக்குதான்னு முத்தம்மா கொடுக்க முடியும்

5.பொறுத்தவ பூமி ஆளுவா

6.ஊசி தங்கம்ங்கறதுக்காக கண்ணுல குத்திக்க முடியுமா

7.மன்ன தின்னாலும் மறவா திண்ணனு

8.தர்மத்துக்கு தர்மம் தான் சரி

9.காதத்த ஊசியத்தான் கடை தெருவில் தேடுறியா

10.மரணத்துக்கு மருந்து இல்ல

11.காலுக்கு தகுந்தாப்புல தான் செருப்பு

12.அச்சாணி இல்லாத தேரு முச்சாணும் ஓடாது

13. உப்ப தின்ன ஆசைப்பட்ட பிறகு தண்ணிய தான் குடிச்சு ஆகணும்

14.தலைக்கு மேல வெள்ளம் போயிடுச்சு

15.கெட்டுப்போக காலம் வந்தா சொட்டு புத்தியும் மண்டையில ஏறாது

16. சொப்பனத்தில் கண்ட அரிசி சோறு ஆவாது

17. துறவிக்கு வேந்தன் துரும்பு

இயற்கை

1.அக்கினி மலையில கற்பூரம் காட்ட சொல்லுரயாடா

2.சாதுமிரண்டால் என்னவாகும்

3.நெருப்ப முழுங்குனா கரிய தான் பேண்டு ஆகணும்

4..அக்கினி பந்தலுல வெண்ணப் பதும

5.நெருப்பு கட்டிய முழுங்கின நாயி கரியா பேள போகுது

6.கடல்த்தண்ணி கொதிச்சா விலாவ தண்ணி ஏது

7.மலைப் போல வந்தது பனிபோல போயிடுச்சு

8.காத்து அடிச்சா விளக்கு அமுஞ்சி தான் போகணும்

9.கையில நெருப்ப கொட்டியது போல

விலங்குகளும் பறவைகளும்

1.மாடா உழைச்சி எறும்பா தேஞ்சு

2.நாய் மடி பால் சொரந்தா என்ன சொரக்கலைன்னா என்ன

3.மந்தி மயிற மருந்துக்கு கேட்டா மரத்துக்கு மரம் தாவிக்கிட்டு தானுங்கோ இருக்கும்

4.நாயக் குளிப்பாட்டி நடுவூட்டுல வச்சாலும் அது வாழ சுருட்டி கிட்டு எங்க போகணுமோ அங்கிட்டு தான் போகும்

5.நாய் நக்குன சட்டி நாய் தலையில போட்டு உடைச்சு போடலாம்

6.நண்டு கொழுத்தா வலையில தங்காது

7.அடங்காத மாடு அத்துக்கிட்டு தான்டா போகும்

8.பாம்பை முட்டையிலேயே கொன்னு போடணும்

9.கோழி காலுல சலங்கைய கட்டினாலும் குப்பையை தான் கிளரும்

10.குளவி கூட்ட குத்துக்கோலால குத்தி போட்டு எதுக்கு கத்தோணும்

11.வேலியில போற ஓணான வேட்டியிலே வுட்டுகிட்டு பாடுபட போறியா

12.பாம்பு தம் பசிய நினைச்சு வாழுமாம் தேர அது விதி என்று நினைத்து ஏங்குமாம்

13.தேளுக்கு மணியம் கொடுத்தா நிமிஷத்துக்கு நிமிஷம் கொட்டித்தாண்டா தீரும்

14.பாம்பை ஓடி மிதிக்கிற வவுசு

15.ஈக்கி விஷம் தலையில

16.மாட்ட கேட்டுக் கொட்டாரம் போடணும்னு நெனச்சா இந்த வனம்பூரா மாட்ட புடிச்சுகிட்டு சுத்த வேண்டியதுதான்

பழக்கவழக்கங்களும் நம்பிக்கைகளும்

1.அஸ்டமத்து சனி புடிச்சு புட்டத்துத் துணிய உறிஞ்சிக்கிட்ட மாதிரி

2.அங்காடிக்காரி கிட்ட சங்கீதம் பாட சொன்னா வெங்காயம் கருவேப்பிலைனுதான் பாடுவா

3.கள்ளன நம்புனாலும் நம்பலாம் குள்ளன நம்பக் கூடாது

உளவியல்

1.பாலு வாக்க வேண்டிய மனசுக்கு நெருப்ப வாரி போட்டு புட்டாயேடா

2.மனசு போன தாவெல்லாம் காலு பாஞ்சு போச்சுன்னா தடம் முடியாதும்மா

3.நெஞ்சுல பாலவாக்கலனாலும் பரவாயில்ல

தெய்வம்

1.ஆறு கடன் நின்னாலும் மாரி கடன் நிக்க கூடாதுப்பா

2.அண்டத்தை சுமக்கிறவளுக்கு நாமெல்லாம் சுண்டக்கா

3.திருடிக்கு சாமி பூதமெல்லாம் ஏது

4.மாயமும் இள்ள மந்திரமும் இல்ல

5.தெய்வம் நின்று கொல்லும்

6.திக்கத்தவிங்களுக்கு தெய்வம் தான் தொண

வேளாண்மை

1.ஏறாத மடக்கி நீர் பாய்ச்சிரத விட தண்ணி போற பாதையை வெட்டிப்போட்டு விட்டுடு

2.உழுவுற காலத்துல ஊரைச் சுத்திப் போட்டு அறுவடை காலத்துல அருவா எடுத்துட்டு போனா என்னடா கெடைக்கும்.

மரம் செடி கொடிகள்

1.தென்ன மரத்துல தேள் கொட்டுனதுக்கு பனை மரத்துல நெறி கட்டி கிட்ட கத

2.மரத்த வச்சவன் தண்ணிய ஊத்துவான்

3.கத்திரிக்காய் சொத்தை ஆனதுக்கு அருவாளக் குத்தம் சொல்லி என்ன ஆகப் போகிறது

4.ஊருக்கே தெரிஞ்ச கதை உளுந்துக்குள்ள மறைக்க முடியுமா

5.முழு பூசணிக்காய சோத்துல மரச்சானாம் முள்ளிக்காட்டான்

உறவு

1.அக்கா புள்ள ஆபத்துக்கு உதவாது தங்கா புள்ள தாவத்துக்கு உதவாது

2.புள்ள வரம் கேட்டாலே புருஷனை முழுங்கி போட்டு நிக்கிறா

3.அரசன நம்பி புருஷனை உட்ட கதையா

4.பெத்த மனசு பித்து புள்ள மனசு கல்லு

5.மாதா பிதா மக்களுக்கு சத்ரு தானுங்களே

6.கட்டத் துணி இல்ல கூத்தியாரு ரெண்டு பேரு கேக்குது

7.புருஷன் பொண்டாட்டி உறவு மட்டும்தான் பாதியில வந்தாலும் பரலோகம் போன பிறகும் தொடரும்

8.மாதா செஞ்சது மக்களுக்கு

மாதம்,கிழமை

1.ஆடி காற்றில் அம்மி பறக்கிறது அப்பளங்கள் என்ன செய்ய முடியும்

2.பகல்ல பார்த்து பேசணும் ராவு அதையும் பேசக்கூடாது

கோள்கள்

1.குரு கோழி கூவையில வந்தா சனி சாமத்துக்கு போய் நிக்குது

2.பிள்ளையாரை புடிச்ச சனி அரச மரத்தையும் புடிச்சுகிச்சு

நுண்கலை

1.ஊரு ரெண்டுபட்டா இந்த கூத்தாடிக்கு தான் எப்பவும் மொத சந்தோசம்

வானியல்

1.இடி விழுந்த மரம் போல

மருத்துவம்

1.கடப்பாரை முழுங்கி போட்டு சுக்கு கசாயம் குடிச்சா ஜீரணமாகுமாடா

பல்பொருள்

1.ராசா வீட்டு கண்ணு குட்டியே எந்த நாட்டு ராணியும் ராசனும் நினைச்சுகிட்டு கீறாங்களோ

2.அவுசாரிக்கு ஆண இல்ல திருடிக்கு தெய்வமில்லை குடிகாரனுக்கு வாக்கு சுத்தமில்லையே

3.புத்தி இருந்தா பூ கூட சுமந்து போ புத்தி இல்லனா மலக் கூட சுமந்து போ

4.வெந்நீர்ல ஊடு வேகமா

5.கோந்தாள மாதிரி வளர்ந்து கீற கொஞ்சமும் மதி இல்ல

6.ஊனி வெச்ச கோலே உச்சிய பொளக்குது

7.கோவம் வந்து கிணத்துல விழுந்தா சந்தோசமா வந்து எட்டிப் பார்க்கும்

8.கொதிக்கிற சுடு தண்ணிய செத்த ஆறவிட்டு தான் குடிக்கணும்

9.கிணறு வெட்ட பூதம் கிளம்பின கணக்கால்ல

10.ஒய்யாரக் கொண்டையாம் தாழம்பூவாம் உள்ள தொறந்து பார்த்தா அத்தனையும் ஈரும் பேணுமாம்

11.வெந்தது தின்னு போட்டு வந்ததெல்லாம் பேசுறது தான் வேலையா

12.மானமில்லா அவுசாரிக்கு நாலு திக்கும் வாசல் தான்

13.ஆயிரம் தான் ஆனாலும் அவுசாரி சம்சாரி ஆக மாட்டா

14.ஊருக்கு நேர்ந்துவிட்ட அவுசாரி யாருக்குன்னு ஆடுவாளுங்களோ

15.ஒண்ட வந்த பிடாரி ஊர் பிடாரி ஆன கதையா

16.அன்ன நடக்கோணும்னு ஆசைப்பட்டு நடைய இழந்தாலாம் தவிட்டுக்காரி

17.கடப்பாரையை நெஞ்சுல குத்துன மாதிரி

18.மலத்துல ஏன் கால வைக்கணும் நல்ல தண்ணியை ஏன் தேடி போகணு

19.மொட்டை அடிச்சு தலைக்கு வகுடு வலம் எடுத்தா என்ன இடம் எடுத்தா என்ன

20.அவுசாரிக்கு ஆணை இல்ல திருடிக்கு சாமி இல்ல

21.மண்ணாங்கட்டி பொம்மனாட்டிக்கு எரமட்டையில தான் பணியாரம் போடணும்

22.ஐயோன்னா அந்தப் பாவம் கையோட வரும்

23.ஊர அடிச்சு ஒலையில போடுதல்

24.உப்பு தின்ன நாயி தண்ணி குடிக்க போகுது

25.அச்சம் இல்லாதவன் அம்பலத்தில் ஏறுவான்

26.ஓடி மேயுற சிறுக்கி ஒண்டி இருக்க மனசு வருமா

27.ஐங்கதம் போனாலும் செஞ்ச பாவம் தொலையாது

28.வெட்கங்கெட்ட நாய்க்கு வாழ்க்கை ஒரு கேடு

29.அகழில வாழுற முதலைக்கு அது தானுங்களே வைகுண்டம்

30.அக்கினிய தின்னு ஜீரணிச்சவனுக்கு அள்ளித் தண்டு தின்னுறது கஷ்டமா

31.ஒட்டுறவன் சரி இல்லனா எருது மச்சான் முறை கொண்டாடும்

32.அக்கினி மல பேஞ்சுக்கிட்டு கீது அதுல பஞ்ச பொதச்சு வைக்காத

33.எச்ச இலை சோறு ருசியாக்கிது

34.பையன் படித்தாண்டுனா குடும்பம் தான் அழியும் பொண்ணு படிதாண்டுனா பூமியே அழிஞ்சு போயிடுமே

35.முடிஞ்சு போன கண்ணாலத்துக்கு மோளம் அடிச்சு ஒன்னும் ஆவப்போறதில்ல

36.ஊனி வச்சு பிடிச்சிருந்த கோலே எங்க உச்சி மண்டைய பொளந்து போயிடுச்சு

37.தலைக்கு வந்தது தலப்பாகையோட போன மாதிரி

38.அம்மண தேசத்தில கோவணம் கட்டிக்கிறவன் பைத்தியக்காரனா தெரிவான்

39.திருடனுக்கு தேள் கொட்டியதைப் போல

40.தொடப்பக்கட்டைக்கு பட்டுக் குஞ்சம்

41.அர்ப்பணுக்கு வாழ்வு வந்தா அர்த்த ஜாமத்தில் குடைய மட்டுமில்ல கூலிங் கிளாஸ் கண்ணாடியும் போட்டுக்கிட்டு திரிவானுக

42.திருடி குடியாவாது தவிடு கலி ஆகாது

43.கருங்காலி ஒலக்கைய வெள்ளிப்பூனு போட்டு மறைச்ச

44.போகாத இடத்துக்கு கூடிப் போனா வராததெல்லாம் வந்து சேரும்

45.காசுக்கு போன மானத்தை கோட்ட கொடுத்தாலும் திரும்பி வருமா

முடிவுரை

முறி-எனும் நாவலின் வாயிலாக மலையாளி இன மக்களின் வாழ்வியல் பண்பாட்டுப் பின்னணியை அறிய முடிகிறது. பழமொழி வாய்மொழிக் கூறுகளில் இன்றியமையாத ஒன்றாகவும் அவை அனைத்து சமூகத்திற்கும் ஏற்புடையது என்பதை அறிய முடிகிறது. மனித வாழ்வில் தவிர்க்க இயலாத ஒன்றாக விளங்குகின்றது. இந்நாவலில் பழமொழியானது சிறப்பானதொரு இடத்தைப் பெற்றுள்ளது.

துணைநூற்பாட்டியல்

References

[1]. பேகம் த. முறி,Ukiyota Publishing,2022.

[2]. சக்திவேல் சு. நாட்டுப்புற இயல் ஆய்வு,மணிவாசகர் பதிப்பகம்,சென்னை,8ம் பதிப்பு.

[3]. சிவலிங்கனார் ஆ. (தொகுப்பும் குறிப்பும்),தொல்காப்பியம் உரைவளம்- உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்,சென்னை- 1998

[4]. Richard M.Dorson,Folklore and Folk life, Chicago Press (ED-1972).